குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திரு.S.சதாம்உசேன், B.A., L.L.B.
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி..எண் 11/2022

ம.சா. 1

2025–ம் ஆண்டு ஜுன் மாதம் 23–ம் தேதி திங்கள் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆர்.சதீஷ்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சூர்யசேகர் | தொழில் | |
| தந்தை பெயர் | நாராயணன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: காலை 12.03 மணி,

Complainant Suryasekar present. Advocate Mr.G.Karunagaran present for Complainant. Accused Tamilkani present. Advocate Mr.Kamalababu present for Accused.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

1) ஆஜர் எதிரியை எனக்கு எப்படி தெரியும் என்றால் எனது பக்கத்து ஊர்காரர் என்கிற முறையிலும் எனது ஊருக்கு அடிக்கடி வந்து போவார் என்பதாலும், படிக்கும் காலத்தில் இருந்தே எனக்கு ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரி என்னிடம் அவசர தேவைக்காக என்று என்னிடம் கடன் வாங்கினார். நான் எனது பிரமாண பத்திரிக்கையில் ஆஜர் எதிரி ஒரு ஓட்டல் தொழில் செய்வதாக கூறியுள்ளேன் என்றால் சரி, எதிரி ஓட்டல் தொழில் செய்வது எனக்கு தெரியும். ஆஜர் எதிரி ஓட்டல் தொழில் செய்வதற்கு இந்த நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்ய வில்லை.

2) நான் அரசு ஒப்பந்ததாரராக இருந்து வருகிறேன். மேற்படி நான் அரசு ஒப்பந்ததாரராக இருந்து வருவதற்கு ஆவணங்கள் ஏதும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி சங்கதியை எனது பிரமாண பத்திரிக்கை, புகார் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரி. நான் ஆஜர் எதிரிக்கு கடனாக கொடுத்த ரூ.5,00,000/– ஐ எவ்வாறு ஈட்டிக் கடனாக கொடுத்தேன் என்றால் எனது வருமானத்தின் மூலம் ஈட்டிய பணமாகும். ஆஜர் எதிரிக்கு கடன் கொடுத்த தேதியில் எனது வங்கியில் பணம் இருந்ததற்கான சான்றை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை.

3) ஆஜர் எதிரி என்னிடம் எனது ஊர் சின்னதிருப்பதியில் வைத்து கடன் கேட்டார். நான் ஆஜர் எதிரி சின்னதிருப்பதியில் வைத்து தான் என்னிடம் பணம் கேட்டார் என்பதை என்னுடைய பிரமாண பத்திரம் மற்றும் புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ஆஜர் எதிரிக்கு கடனாக கொடுத்த

தொகையை என்ன எவ்வளவு ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேன் என்று கூறியுள்ளேனா என்றால் இல்லை. ஆஜர் எதிரி எந்த தேதியில் என்னிடம் கடன் கேட்ட தேதி எனக்கு ஞாபகம் இல்லை, கடன் கொடுத்த தேதி மட்டும் தான் தெரியும். ஆஜர் எதிரி என்னிடம் கடன் கேட்கவில்லை என்றாலும் நான் சொல்வது போல் ஆஜர் எதிரிக்கு கடன் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

4) நான் அரசு ஒப்பந்ததாரராக இருந்து வருவதால் அதற்கான வருமான வரி தாக்கல் செய்து வருகிறேனா என்றால் தாக்கல் செய்து வருகிறேன். அது சம்பந்தமான ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆஜர் எதிரி கடன் வாங்கிய சமயத்தில் அவர் தனியாக தான் வந்தார். ஆஜர் எதிரி கடன் வாங்கிய பின்பு காசோலையை தான் ஆதாரமாக கொடுத்தார். ஆஜர் எதிரி என்னிடம் கடன் கேட்கவில்லை என்றாலும் நான் சொல்வது போல் ஆஜர் எதிரிக்கு கடன் கொடுக்கவில்லை என்றாலும் வேறு வகையில் கிடைத்த காசோலையை வைத்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஆஜர் எதிரியிடம் இருந்து பணம் பறிக்கும் நோக்கத்தோடு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 12.18 மணி.

Sd/S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.